People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

27.04.2017

# பத்திரிகை செய்தி

## சல்லிக்கட்டு போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களிடம் பெற்ற 110 வாக்குமூலங்களை மாண்புமிகு நீதியரசர் எஸ் ராஜேஸ்வரன் அவர்களின் தலைமையில் செயல்படும் விசாரணை ஆணையத்திடம் மக்கள் கண்காணிப்பகம் ஒப்படைக்கிறது

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான தடையை நீக்கக்கோரி 2017 ஜனவரி மாதத்தில் மாணவர்கள், பொதுமக்கள் பங்கேற்பு செய்த மிகப்பெரிய போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது.

ஜல்லிக்கட்டு தடைநீக்க போராட்டத்தின்போது, போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக தமிழகத்தில் காவல்துறையினர் நடத்திய வன்முறை குறித்து விசாரிப்பதற்காக மாண்புமிகு நீதியரசர் இராஜேஸ்வரன் அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் மக்கள் கண்காணிப்பகம் தலையீடு செய்து, (உயர்மட்ட கள ஆய்வுக்குழு) முனைவர். வே. வசந்திதேவி (முன்னாள் துணைவேந்தர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்) அவர்கள் தலைமையில், உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சுதாராமலிங்கம், அஜிதா, சென்னை பல்கலைக்கழக பேராசிரியர்கள் டாக்டர். இரவீந்திரன், டாக்டர். மணிவண்ணன், எழுத்தாளர் தியாகு மற்றும் லயோலா கல்லூரி பேராசிரியர் கிளாஸ்டன் சேவியர் அடங்கிய உயர்மட்ட ஆய்வுக் குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து சம்பவம் குறித்து விசாரித்தனர்.

ஜனவரி 31, மற்றும் பிப்ரவரி 1,2 ஆகிய தேதிகளில் உயர்மட்டக் குழுவினரிடம் பாதிக்கப்பட்டவர்கள் கூறிய விவரங்களின் அடிப்படையில், சத்தியபிரமாண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டு மேற்கண்ட விவரங்களை படித்துக்காட்டி ஒப்புதல் பெறப்பட்டது.

மக்கள் கண்காணிப்பகம் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களிடம் புகார் பெற்று தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்பிய நிலையில் பாதிக்கப்பட்டவர்களிடம் பெற்ற சுமார் 110 வாக்குமூலங்களை நாளை 28.4.2017 அன்று மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.இராஜேஸ்வரன் அவர்களின் தலைமையில் செயல்படும் விசாரணை ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.